**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**Bachelor of Arts (External –New Syllabus) Examination 100 Level – 2025**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 100 මට්ටම - 2025**

**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 100 வது தேர்ச்சி மட்டம் – 2025**

**(PHYE 102- LOGIC AND LOGICAL THEORY)**

**(PHYE 102- அளவையியலும் அளவையியல் கோட்பாடுகளும்)**

කාලය පැය **(03)** තුනයි.
மூன்று**(03)** மணித்தியாலங்கள்.
Time three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව **10** කි.
There are **10** questions in the question paper.
இந்த வினாப்பத்திரத்தில் **10** வினாக்கள் உள்ளன.

ප්‍රශ්න 05 කට පමණක් පිළිතුරු සපයන්න.
Answer **Five** (05) Questions only
ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

01. அரிஸ்டோட்டிலிய அளவையியலில் பின்வருவன பற்றி குறிப்புரை தருக.

   I. ஒரு எடுப்பின் அம்சங்கள்
   II. எடுப்புக்களும் வாக்கியங்களும்
   III. ஒரு பதத்தின் கருத்துக் குறிப்பும் அகலக் குறிப்பும்
   IV. சிந்தனை விதிகள்

(04×5=20 புள்ளிகள்)

02. அ) உதாரணங்கள் தந்து, உடன் அனுமானத்திற்கும் ஊடக அனுமானத்திற்கும் இடையேயான வேறுபாட்டை விளக்குக.

ஆ) "விமர்சன சிந்தனை பயனுள்ள முடிவுகளை உருவாக்குகின்றது" என்ற இக் கூற்றை ஆராய்க.

(10×02=20 புள்ளிகள்)

03. அ) பாரம்பரிய எடுப்பு முரண்பாட்டுச் சதுரத்தை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

ஆ) உதாரணங்கள் தந்து, எதிர்மறை முரண்பாட்டுத் தொடர்புகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

04. அ) 'வெளிப்பேறு அனுமானம்' என்றால் என்ன என்பதை வரையறை செய்து விளக்குக.

ஆ) மறுமாற்றத்தை விளக்குக. ஒரு வாய்ப்பான மறுமாற்றத்திற்கு பின்பற்றப்பட வேண்டிய விதிகள் யாவை?

(02×10=20 புள்ளிகள்)

P.T.O.

05. பின்வரும் நியாயத் தொடைகளின் வாய்ப்பினைத் தீர்மானிக்குக. நியாயத்தொடை ஒன்று வாய்ப்பற்றதாயின் மீறப்பட்டுள்ள விதி/விதிகளைக் கூறி நிகழ்ந்துள்ள போலியின் பெயரைத் தருக.

I. எல்லா விவசாயிகளும் அப்பாவிகள். அப்பாவிகளில் சிலர் பெண்கள். ஆகவே சில பெண்கள் விவசாயிகள்

II. மனிதன் இறக்கக் கூடியவன். ஆகவே சில பறவைகள் மனிதன் ஏனெனில் பறவைகள் இறக்கக் கூடியவை.

III. எந்தவொரு மாணவனும் உயரமல்ல. எந்தவொரு உயரமான மாணவனும் புத்திசாலி அல்ல. ஆகவே புத்திசாலிகளில் சிலர் உயரமானவர்கள் அல்ல

IV. யானைகளும் மரங்களும் பெரியவை. ஆகவே மரங்கள் யானைகள்

(05×4=20 புள்ளிகள்)

06. அ) முடிவு மறை எடுப்பாக இல்லாத போது ஏன் முறையற்ற பெரும்பத போலி உருவாகுவதில்லை என்பதற்கான காரணத்தை விளக்குக.

(06 புள்ளிகள்)

ஆ) ஒவ்வொன்றுக்கும் குறியீட்டு உதாரணங்கள் தந்து, முதலாம் மற்றும் இரண்டாம் உருக்களின் வலிதான பிரகாரங்கள் எதுவென விளக்குக.

(14 புள்ளிகள்)

07. அ) அரிஸ்டோட்டிலிய மற்றும் இந்திய நியாயத் தொடை வாதங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

(10 புள்ளிகள்)

ஆ) இந்திய அளவையியலில் சுவார்த்தனுமானத்திற்கும் பரார்த்தனுமானத்திற்கும் இடையேயான வேறுபாட்டினைத் தருக.

(10 புள்ளிகள்)

08. அ) உமது சுருக்கத்திட்டத்தினைத் தந்து, பயனிலைத் தர்க்கத்தின் வழியே பின்வரும் வாக்கியங்களை குறியீட்டாக்கம் செய்க.

I. எல்லா ஆசிரியர்களும் அன்பானவர்கள்
II. சிலர் துணிச்சலானவர்கள்
III. எந்தவொரு மனிதனும் நித்தியமானவனும் கடவுளும் அல்லன்
IV. சிலர் மாணவர்கள் அல்லர்

(04×2.5=10 புள்ளிகள்)

P.T.O.

ஆ) பின்வருவனவற்றை உதாரணங்கள் தந்து விளக்குக.

I. குறைத் தனியனாக்கம்
II. அளவாக்க மறுப்பாக்கம்

(02×5=10 புள்ளிகள்)

09. அ) நியமமில் போலி வகையில் சேர்க்கக் கூடிய இரண்டு போலிகளை விளக்குக.
(08 புள்ளிகள்)

ஆ) ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தந்து, பின்வரும் நியமமில் போலிகளைச் சுருக்கமாக விளக்குக.

I. மாக்கள் நியாயப் போலி
II. இரு பொருள்ப் போலி
III. அனுதாபவழிப் போலி

(03×4=12 புள்ளிகள்)

10. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

I. தர்க்க ரீதியான நியாயித்தல்
II. பாணிமை வேறுபாடுகள் (Stylistic Variants)
III. நிறை மற்றும் குறை எடுப்புக்கள்
IV. முரணுரை
V. இருதலைக்கோள்
VI. நவீன எடுப்பு முரண்பாட்டுச் சதுரம்

(04×5=20 புள்ளிகள்)